நம்நாடு ஒக்டோபர் 28, 1999

# வேலணை மத்திய மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்கம் கனடா போசாக்குணவுத் திட்டத்திற்கு நான்காவது கட்டமாக நிதியுதவி!




வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் தற்போது கல்வி கற்றுவரும் மாணவர்களுக்குப் போசாக்குணவு வழங்கும் திட்டத்திற்கு வேலணை ம.ம.வி பழைய மாணவர் சங்கத்தினர் மீண்டும் 1500 டொலர்களைக் கடந்த 26.10.99 அன்று அனுப்பி வைத்துள்ளார்கள். சத்துள்ள உணவுகள் உட்கொள்ள முடியாத பொருளாதார நிழைலமை காரணமாகவும் சீரற்ற போக்குவரத்தின் காரணமாக சுற்றிவளையும் பாதைகளினூடாக நடந்து வருவதனாலும் உற்சாகமிழந்து கல்வியிலும் விளையாட்டுக்களிலும் ஊக்கங்குறைந்தவர்களாக உருவாகியுள்ள மாணவர்களுக்குச் சத்துள்ள உணவுவழங்குவதற்கு நிதியுதவியளிக்குமாறு கல்லூரியின் அதிபர் திரு.கு.கணேசலிங்கம் அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று மேற்படி சங்கத்தினர் கட்டங்கட்டமாக நிதியுதவியளித்து வருவது யாவரும் அறிந்ததே. இதுவரை இத்திட்டத்திற்காக 5000 டொலர்களை அனுப்பிவைத்துள்ளதாகச் சங்கத்தின் தலைவர் திரு.சி. இளஞ்செழியன் அவர்கள் நம்நாட்டிற்குத் தெரிவித்துள்ளார். தற்போதுள்ள இக்கட்டான சூழ்நிலையில் அங்கு கல்வி பயிலும் வறியமாணவர்களுக்கு உதவவேண்டியது பழைய மாணவர்களின் தார்மீகப் பொறுப்பாகும். என்பதனைச் சங்கத்தினர் நன்குணர்ந்து செயற்படுத்திவரும் இவ்வுதவியானது காலத்தால் செய்த பேருதவியாகக் கருதப்பட்டதுடன் இத்திட்டமானது கல்லூரியில் மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான உந்து சக்தியாக அமையுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.